முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

முன்னிலை : திரு. V. பத்மநாபன், M.A. M.L., D.H.,
முதன்மை மாவட்ட நீதிபதி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள், வியாழக்கிழமை.

E.P.No.28/2023
in
M. Arb.O.P.No.325/2020

மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்
அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர் டி. ஜெகன் மூலமாக,
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:மணப்புரம் ஹவுஸ்,
வலப்பாடு, திருச்சூர்,
கேரளா–680 567.

.... மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்.

–எதிர்–

1. ஆ. பன்னீர்செல்வம், 52/2022,
த/பெ. ஆறுமுகம். .... 1 ஆம் எதிர்மனுதாரர்/தீர்ப்புக் கடனாளி.

இவ்வழக்கில் மனுதாரருக்காக வழக்கறிஞர் திருவாளர்கள்.எம். சரவணன், டி.பாலமுருகன், க.தினேஷ்குமார் மற்றும் எஸ்.சதீஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் திருவாளர்கள்.இ. ராமலிங்கம் மற்றும் பி.மோகன்தாஸ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இறுதியாக 21.04.2026 அன்று என் முன்பாக வரப்பெற்று இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.30 18:24:43 +0530

<u>உத்தரவு</u>

உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21, விதி 11(2)—ன் கீழ் இம்மனு தாக்கல்.

2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>:

நிறைவேற்று மனுவில் கண்ட தொகையான ரூ.17,25,440/—ஐ எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றம் நிர்ணயிக்கின்ற காலக்கெடுவுக்குள் செலுத்த உத்தரவிட வேண்டியும், அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில், உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21, விதி 37 மற்றும் பிரிவு 55—இன் கீழ் 1 ஆம் எதிர்மனுதாரரை கைது செய்து சிவில் சிறையில் அடைக்க உத்தரவிட வேண்டியும் மனுதாரரால் இம்மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>

எதிர்மனுதாரர்கள், மனுதாரரிடம் கடன் பெற்றுள்ளதாக சொல்லி கேரளா மாநிலம், திருச்சூர் நடுவர் தீர்ப்பாயத்தில் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக தீர்ப்பு பெற்றிருப்பது வழக்கு கோப்பை நீதிமன்றத்தில் பார்த்த போதுதான் எதிர்மனுதாரர்களுக்கு தெரியவந்தது. மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. எதிர்மனுதாரர்கள் பெரம்பலூரில் உள்ள Manapuram finance Ltd., கிளையில் 2019—ம் வருடம் மார்ச் மாதம் ரூ.10,80,000/—கடன் பெற்று, மாதம் தவணை ரூ.39,500/— வீதம் 7 தவணைகளில் ரூ.2,76,500/— செலுத்தியுள்ளார்கள். கொரனா வந்ததால் வருமானம் இல்லை. மனுதாரர்கள் தவணையை சரியாக செலுத்த இயலவில்லை. மனுதாரர் அலுவலகத்தில் இருந்து அதிகாரிகள் வாகனத்தை ஜப்தி செய்து, வேறு நபருக்கு விற்று, எதிர்மனுதார்கள் செலுத்த வேண்டிய மீதி பாக்கி தவணைக்கு சரி செய்துக் கொண்டு இனி எதிர்மனுதார்களுக்கும் மனுதாரருக்கும் வாகனம் சம்பந்தமாக எந்தவித கொடுக்கல், வாங்கல் இல்லை என்றும், தவணை முழுவதும் வரவு வந்து விட்டதால் கடனை செலுத்த வேண்டியதில்லை என்று கணக்கை நேர் செய்துக்கொண்டுள்ளார்கள். ஆனால் அதற்கான எந்த ஆவணத்தையும்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.30 18:24:47 +0530

மனுதாரர் நிறுவனம் கொடுக்கவில்லை. எதிர்மனுதார்களும் கேட்டு வாங்கி வைத்துக்கொள்ளவில்லை. மனுதாரர் நிறுவனம், 2022 ஆம் வருடம் பெரம்பலூர் மாவட்டகண்காணிப்பாளர் அவர்களிடம் எதிர்மனுதார்கள் மீது புகார் கொடுத்து, மேற்படி புகாரின் விசாரணையில் கடன் தொகை சரிசெய்யப்பட்டு விட்டதாக தெரிய வந்ததும் மேற்படி மனு காவல் துறை அதிகாரிகளால் முடித்து வைக்கப்பட்டது. அதன்பின்னர் மனுதார்களுக்கு நீதிமன்றத்தில் இருந்தோ அல்லது தீர்ப்பாயத்தில் இருந்தோ எந்த அறிவிப்பும் வரவில்லை. மேற்படி கடனை எதிர்மனுதார்கள் செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல. ஏற்கனவே தாவா கடன் தொகையை எதிர்மனுதார்கள் செலுத்தி விட்டதால், இந்த கடன் தொகையை செலுத்த வேண்டியதில்லை. எதிர்மனுதார்களுக்கு எந்தவித சொத்தும் இல்லை. குடியிருக்கும் வீடு தவிர வேறு சொத்து இல்லை. சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு உள்ளார்கள். மோசடியாக பெற்றுள்ள தீர்ப்பில் கண்ட தொகையை செலுத்த எதிர்மனுதார்களுக்கு எந்தவிதமான வசதியும், வருமானமும் இல்லை. அதனால் எதிர்மனுதாரர்களால் மேற்படி கடனை செலுத்த எந்தவித ஐவேஜியும் இல்லை. எந்தவித சம்மன் வராததால் எதிர்மனுதாரர்கள் விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி விபரத்தை சொல்ல இயலவில்லை. மேற்படி கடனை திரும்பச் செலுத்த எந்த வருமானம் இல்லாததால் எதிர்மனுதார்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே, மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையானது நிறைவேற்று மனுவில் கண்ட தொகையை செலுத்த எதிர்மனுதாரர்களுக்கு போதுமான வசதி, வாய்ப்பு உள்ளதா?

5. மனுதாரர் நிறுவனம் சார்பில், அதன் சட்ட மேலாளர் மசா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், 1 ஆம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.30 18:24:53 +0530

எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>தீர்வு</u>:

6. மனுதாரரின் நிறுவனத்தில், 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனம் வாங்குவதற்காக ரூ.10,89,113/—கடன் பெற்று, எதிர்மனுதாரர்கள் அத்தொகையை செலுத்துவதில் தவறுகை ஏற்பட்டதால் மத்தியஸ்தர் நடவடிக்கையில் மனு தாக்கல் செய்து, ரூ.10,49,000/—ஐ வட்டியுடன் செலுத்த உத்தரவிட்டுள்ளது என்பது இம்மனுவின் சங்கதிகளில் மறுக்கப்படாத சங்கதிகளாக உள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் மேற்படி தீர்ப்புத் தொகையை செலுத்தவில்லை என்றும், மேற்படி தீர்ப்புத் தொகையை செலுத்த உத்தரவிடக் கோரியும், அவ்வாறு செலுத்தாதபட்சத்தில் 1 ஆம் எதிர்மனுதாரரை உரிமையியல் சிறையில் அடைக்க உத்தரவிட வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மறுப்புரையில், ஏற்கனவே பல தவணைகள் செலுத்தியிருப்பதாகவும், கொரோனா காலகட்டத்தில் வருமானம் இல்லாததால் தவணை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது என்றும், வாகனத்தை மனுதாரர் நிறுவனம் எடுத்துச்சென்று, அதை வேறு நபருக்கு விற்று எதிர்மனுதாரர்களின் கடன் கணக்கில் சரி செய்து, கடன் தொகையை செலுத்த வேண்டியதில்லை என்று கூறி விட்டார்கள் என்றும், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பை மனுதாரர் மத்தியஸ்தர் நடவடிக்கை மூலம் பெற்றுள்ளார்கள் என்றும், நிறைவேற்று மனுவில் கண்ட தொகையை செலுத்த எதிர்மனுதாரர்களுக்கு வசதி, வாய்ப்பு கிடையாது என்று குறிப்பாக கூறியுள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் மறுப்புரையில் கூறியுள்ள தொகை சம்பந்தப்பட்ட விவரங்களை நிரூபணம் செய்வதற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.30 18:24:58 +0530

சான்றுருத்தமும் தாக்கல் செய்யாத நிலையில், அது குறித்து இந்நீதிமன்றம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. அதே சமயத்தில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் முக்கிய எதிர்வாதமாக நிறைவேற்று மனுவில் கூறியுள்ள தொகையை செலுத்த எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித வருமானமும், வசதி, வாய்ப்பும் கிடையாது என்று கட்சி செய்யப்பட்டுள்ளது. இம்மனுவின் விசாரணையின் போது மனுதாரர் நிறுவனத்தின் சட்ட மேலாளர் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தில் *"எதிர்மனுதாரர்களது கிராமத்தில் விவசாயம் மற்றும் வாகனம் வைத்தும் பணம் கொடுக்கல், வாங்கல் தொழில் செய்து மாதம் சுமார் ரூ.25,000/- வருமானம் பெற்று வருகிறார்கள்"* என்று கூறியுள்ளார். ஆனால் மேற்படி சங்கதியை சான்றுருத்தம் செய்யும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின்போது எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமாக நிலங்கள் உள்ளது என்று ஒரு தூண்டுரை வைக்கப்பட்டிருந்தாலும், எந்த கிராமத்தில், எவ்வளவு நிலங்கள் உள்ளது என்பது குறித்து எவ்வித குறிப்பான சாட்சியமோ அல்லது தூண்டுரையோ மனுதாரர் தரப்பில் அளிக்கப்படவில்லை. அது சம்பந்தமாக எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, எதிர்மனுதாரர்களுக்கு நிறைவேற்று மனுவில் கண்ட தொகையை செலுத்த போதிய வசதி, வாய்ப்பு மற்றும் வருமானம் உள்ளது என்ற சங்கதியை மனுதாரர் நிரூபணம் செய்ய தவறியுள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில், மனுவில் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.30 18:25:03 +0530

10. இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை பொறுத்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவானது என்னால் நிர்வாக உதவியாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் ஒலி வடிவில் குறிப்பு எடுக்கப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிரதி எடுக்கப்பட்டு, பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.30 18:25:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
பெரம்பலூர்.

I. மனுதாரர் தரப்பு சாட்சி:

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | திரு. ராஜேஷ்குமார். |

II. மனுதாரர் தரப்பு சான்றாவணம்:

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | மனுதாரர் நிறுவனம் வழங்கிய அதிகார கடிதம். |

III. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | எ.ம.சா.1 | திரு. பன்னீர்செல்வம். |

IV. எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் :

– இல்லை –

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.30 18:25:14 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
பெரம்பலூர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
பெரம்பலூர்.

வரைவு/தெளிவு உத்தரவு
நிறைவேற்றுதல் மனு எண்.28/2023
இன்
மத்தியஸ்தர் மனு எண்.325/2020.
தேதி: 30.04.2026.